ச.ருவித்

எட்டாம் வகுப்பு

தமிழ் விடைகள்

இரண்டாம் இடைப்பருவ தேர்வு -2024 விடை குறிப்புகள் தமிழ் தர்மபுரி மாவட்டம்

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. காட்டில் இருந்து வந்த ................ கரும்பை தின்றன
   விடை: வேழங்கள்
2. பசியால் வாடும் ................ உணவளித்தல் நமது கடமை
   விடை: அலந்தவர்க்கு
3. கயிறு+கட்டில் என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல் ....................
   விடை: கயிற்றுக்கட்டில்
4. 'செம்மரம்'என்னும் சொல் ........... த்தொகை
   விடை: பண்பு
5. திருமுறைகள் மொத்தம் எத்தனை?.............
   விடை: 12
6. அரசரை அவரது .............. காப்பாற்றும்
   விடை: குற்றமற்ற ஆட்சி
7. நன்று நன்று-என்பது எவ்வகை தொடர்?
   விடை: அடுக்குத்தொடர்

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் உரிய விடை அளிக்கவும் (12வது வினா கட்டாய வினா கட்டாய வினா)

www.Padasalai.Net

8. விடைக்கேற்ப வினா அமைக்க

அ) கலித்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்று

ஆ) தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும்

விடை: அ) கலித்தொகை எந்த நூல்களில் ஒன்று?

ஆ) தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

9. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசை கருவிகளாக சுந்தரர் கூறுவன யாவை?

விடை: புல்லாங்குழல் மற்றும் முழவு தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாக சுந்தரர் கூறுகிறார்.

12. "விடல்" என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக

விடை : இதனை இதனால் இவன்முடிபர் என்றுஆய்ந்து

அதனை அவன்கண் விடல்

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்

13. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுறுபுகளை இட்டு நிரப்புக

அ) இடி .................. மழை வந்தது

ஆ) அருவி மலையல் .................வீழ்ந்தது

விடை: அ) உடன்

ஆ) இருந்து

15. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக

. அ) சான்றோர் எனப்படுபவர் ........................களில் சிறந்தவர் ஆவர்

ஆ) ஆற்று வெள்ளம் ................ பாராமல் ஓடியது

விடை: அ) கல்விக்கேள்வி

ஆ) மேடு பள்ளம்

16. கலைச்சொல் தருக

அ) drum - முரசு ஆ) crafts - கைவினைப் பொருட்கள்

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும் (20வது வினா கட்டாய வினா )

18)திரைக்கதாரத்தை சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார் ?

விடை : பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது, அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆன புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.

கண்களுக்கு இனிய குளிர்ச்சிதரும் ஒளியை உடைய பொன் வண்ண நீர் நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த் திவலைகளை வாரி இறைக்கும்.

நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மத யானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது தோன்றும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும்.

இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் என்று சுந்தரர் வருணனை செய்கிறார்.

20) ஆற்றுதல் என தொடங்கி நோற்றல் என முடியும் பாடறிந்து ஒழுங்குதல் பாடலை அடி மாறாமல் எழுதுக

விடை: ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

. பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை

அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்

21)துணைநிலைத் தொடர்கள் எத்தனை வகை? அவை யாவை?

விடை : தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

வேற்றுமைத்தொகை

. உவமைத்தொகை

வினைத்தொகை

உம்மைத்தொகை

பண்புத்தொகை

அன்மொழித்தொகை

22 ) இரவு பகல் என்பது எவ்வகை தொடர் என விளக்குக

விடை : 'இரவு பகல்' இத்தொடர், 'இரவும் பகலும்' என விரிந்து பொருள் தருகின்றது.

இதில் சொல்லின் இடையிலும் இறுதியிலும் `உம்' என்னும் இடைச் சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது.

www.Padasalai.Net

இவ்வாறு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச் சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்

24) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக

விடை : அனுப்புநர்

சா. சுந்தர்,

த/பெ. ஆ. சங்கர்

34, குறிஞ்சி நகர்,

ஈரோடு - 638 001.

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,

வட்டாட்சியர் அலுவலகம்,

ஈரோடு.

மதிப்புக்குரிய அய்யா,

பொருள் : இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக. வணக்கம்.

www.Padasalai.Net

ஈரோடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கின்றேன். 34, குறிஞ்சி நகர், ஈரோடு - 638 001 என்ற முகவரியில் பத்து ஆண்டுகளாக நாங்கள் வசித்து வருகின்றோம். அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. இத்துடன் குடும்ப அட்டை நகலும் ஆதார் அட்டை நகலும் இணைத்துள்ளேன். ஆகவே, எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இடம் : ஈரோடு

நாள் : 25.06.2020

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

சா. சுந்தர்.

உறைமேல் முகவரி:

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,

வட்டாட்சியர் அலுவலகம்,

ஈரோடு.

www.Padasalai.Net

25) என் பொறுப்புகள்

அ) கைவினை கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்

விடை : ஆ) இசைக் கலையை வளர்த்த சான்றோர்களைப் பற்றி அறிந்து போற்றுவேன்.

இ) நெசவுத் தொழிலின் சிறப்பை அறிந்து போற்றுவேன்.

ஈ) தலைமைக்குரிய பண்புகளை அறிந்து வளர்த்துக் கொள்வேன்.

உ) சமூக மாற்றத்திற்குக் காரணமான தலைவர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்

26)வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்பு நலன்கள் ஆக நீங்கள் கருதுவன நான்கை எழுதுக

**விடை** : உண்மை , உழைப்பு, நேர்மை, அன்பு, அறம், சினம் கொள்ளாமை, புறம் கூறாமை, தன்னம்பிக்கை, ஊக்கப்படுத்துதல், பொறாமை கொள்ளாமை, ஏழைகளுக்கு உதவுதல், பெரியோரை மதித்தல், மனிதநேயத்துடன் இருத்தல், பிறர் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகியனவாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நாங்கள் கருதுகின்றோம்.

விரிவான விடையளி



www.Padasalai.Net

அ) தமிழக கைவினைக் கலைகளை பற்றிய செய்திகளை தொகுத்து எழுதுக

விடை : மண்பாண்டக் கலை :

குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி ஆகிய அனைத்துப் பொருட்களும் சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்டவை.

பக்குவப்படுத்தப்பட்ட களிமண், மெல்லிய மணல் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

சக்கரத்தின் நடுவே வைத்து உரிய வடிவத்தால் அதைக் கொண்டு வர வேண்டும். பிறகு அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்து காயவைக்க வேண்டும். பிறகு உரிய மண்பாண்டம் தயாராகிவிடும்.மண்பாண்டங்களில் சமைத்த உணவு உடலுக்கு நல்லது.

திருவிழாக் காலங்களிலும் சமயச் சடங்குகளிலும் மண்பானைகள் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.மூங்கில் கலை :

(i) மூங்கில் கொண்டு பல கைவினைப் பொருட்கள் செய்யப்படுகின்றன.

(ii) மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய், தொட்டில், பாடை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆகிய அனைத்தும் மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் ஆகும்.

(iii) முன்பு எல்லாம் திருமணத்தின் போது சீர்த்தட்டுகளாகப் பயன்படுத்தினர்பனையோலைக் கலை :

(iv) (i) பனையோலையில் பல கைவினைப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.

(v)

(vi) (ii) குழந்தைகளுக்கான கிளுகிளுப்பை பொம்மைகள், பொருள்களை வைத்துக் கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய், பனை மட்டை நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

(vii)

(viii) பிரம்புக் கலை :

(ix) (i) பிரம்பு என்பது ஒரு தாவரம்.

(x)

(xi) (ii) முதலில் பிரம்புகளை நெருப்பில் காட்டி சூடுபடுத்த வேண்டும். சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரண்டு பாறைகளுக்கு இடையே செலுத்தி வளைக்க வேண்டும்.(iii) அது வேண்டிய வடிவத்தில் கம்பி போல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்து விட்டால், அப்படியே நிலைத்து விடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கூட்டியும் தேவையான பொருட்களாக மாற்ற வேண்டும்.

(xii)

www.Padasalai.Net

(xiii) (iv) பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே அதில் அமர்வது உடல்நலத்துக்கு நல்லது.

(xiv) (v) மேலும் பிரம்புப்பொருள் வீட்டுக்கு அழகையும் கொடுக்கும்.

*******************************

www.Padasalai.Net

www.Padasalai.Net